பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 11 (26—11—68) செவ்வாய் ★ வெளியூர்: கார்த்திகை 12 (27—11—68) புதன் [இதழ்: 134

'தமிழ்நாடு' பெயர் மாற்றம்

மைசூர் அமைச்சர் பாராட்டு

பெங்களூர், நவ. 25—

'சென்னை ராஜ்ய'த்தின் பெயரை 'தமிழ்நாடு' என நாடாளுமன்றம் மாற்றியதற்காக மைசூர் பாசனத் துறை அமைச்சர், தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களுக்குப் பாராட்டுத் தந்தி அனுப்பியிருக்கிறார்.

"மைசூர் மாநிலத்தின் பெயரும் 'கருநாடகம்' என மாறுமென நம்புகிறேன்" என அவர் விழைவு தெரிவித்துள்ளார்.

டிசம்பர் முதல் நாள்

தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கை நிறைவேறிய மகிழ்ச்சி விழா

தமிழகமெங்கும் கொண்டாடப்படுகிறது -- அமைச்சர்கள், கழகத் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்

'சென்னை இராஜ்ய'த்தை, 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்ற வேண்டுமென்ற தமிழர்களின் நீண்ட நெடுநாளையக் கோரிக்கை நிறைவேறியதையொட்டி, டிசம்பர் முதல் நாள் ஞாயிறு அன்று நாடெங்கும் விழாக் கொண்டாடுமாறு கழகப் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்த அறிக்கைக்கிணங்க, தமிழகமெங்கணும் அன்றையத்தினம் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அன்றையத்தினம் மாவட்டத் தலைநகர்கள்தோறும் தமிழக அமைச்சர்களும், கழகத் தலைவர்களும், சொற்பொழிவாளர்களும் விழாக் கூட்டங்களில் பங்கெடுத்துக்கொள்கின்றனர்.

'தமிழ்நாடு' --- மகிழ்ச்சி விழாக் கூட்டங்கள் நடைபெறும் ஊர்களும், சொற்பொழிவாளர்களின் பெயர்களும் வருமாறு :---

சென்னை	...	அமைச்சர் மு. கருணாநிதி நீலநாராயணன்
திருச்சி	...	அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அன்பில் தர்மலிங்கம்
மதுரை	....	அமைச்சர் கே. ஏ. மதியழகன் எஸ். முத்து எம்.எல்.சி.
கோவை	...	அமைச்சர் சத்தியவாணிமுத்து எஸ். ஏ. இராசமாணிக்கம் மு. கண்ணப்பன் எம்.எல்.ஏ.
சேலம்	...	அமைச்சர் ஏ. கோவிந்தசாமி ஈ.ஆர்.கிருஷ்ணன் எம்.எல்.ஏ.
நெல்லை	...	அமைச்சர் மா. முத்துசாமி இரத்தினவேல் பாண்டியன் பி.ஏ.பி.எல்., ஏ. எல். சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
உதகை	...	அமைச்சர் எஸ்.ஜே. சாதிக்பாட்சா கே. பி. முருகேசன் எஸ்.கருணைநாதன் எம்.எல்.ஏ.
நாகர்கோயில்	...	என். வி. நடராசன் எம்.எல்.சி. கே. திரவியம்
தருமபுரி	...	சி. பி. சிற்றரசு எம்.எல்.சி. எச். எல். முருகேசன் எம். சுப்பிரணியம் எம்.எல்.ஏ.
தஞ்சை	...	மேயர் வேலூர் நாராயணன் துணை மேயர் கோவிந்தசாமி மன்னை ப. நாராயணசாமி மாணவர் இராசா முகம்மது
செங்கற்பட்டு	...	புலவர் அறிவுடைநம்பி, செ.கோ, விசுவநாதம் எம்.எல்.ஏ.
திருவொற்றியூர்	...	நா. கணபதி பி.எஸ்சி. பி.எல்., அ. பொ. அரசு எம்.எல்.ஏ., பி. சிவசங்கரன் எம்.பி.
திருவள்ளூர்	...	க. வேழவேந்தன் எம்.எல்.ஏ., எஸ். கே. சம்பந்தம் எம்.பி., எஸ்.எம்.துரைராசுஎம்.எல்.ஏ.
காஞ்சிபுரம்	....	சி. சிட்டிபாபு எம்.பி., கே. டி. எஸ். மணி எம்.சி., காஞ்சி மணிமொழியார்.
வேலூர்	...	முரசொலி மாறன் எம்.பி., ஜி. விசுவநாதன் எம்.பி., எம். பி. சாரதி எம்.எல்.ஏ., தோப்பூர் திருவேங்கடம் எம்.ஏ.
அரக்கோணம்	...	துரை முருகன் எஸ்.ஜே.இராமசாமிஎம்.எல்.ஏ.
ஆற்காடு	...	ஏ. பி. சனார்த்தனம் எம்.எல்.சி., ஏ. எல். சி. கிருட்டிணசாமி
ஆம்பூர்	...	டி.வி. நாராயணசாமி எம்.எல்.சி. சைதை சம்பந்தம்
திருப்பத்தூர்	...	புலவர் பொன்னிவளவன், சி.கே. சின்னராசு எம்.எல்.ஏ., அரூர் முத்து எம்.பி.
குடியாத்தம்	...	காஞ்சி கல்யாணசுந்தரம் ஜி. நட்ராசன் எம்.எல்.ஏ.
வாலாசா	...	டி. கே. சீனிவாசன் எஸ். முருகையன் எம்.எல்.ஏ.
திருவண்ணாமலை	...	நன்னிலம் நடராசன் இரா. தர்மலிங்கம்
ஆரணி	...	என். வீராசாமி எம்.எல்.ஏ. நரசிம்மன் எம்.எல்.ஏ.
கடலூர்	...	பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ. இரா. சாம்பசிவம் எம்.எல்.சி.
திண்டிவனம்	...	அலமேலு அப்பாதுரை எம்.எல்.சி., அமுதா ராகவன், ஏ. ஜி. பாலகிருஷ்ணன் எம்.எல்.ஏ.
விழுப்புரம்	...	வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி. எம். சண்முகம் எம்.எல்.ஏ.
கிருஷ்ணகிரி	...	சிற்றுளி சுப்பிரமணியம் எம். கமலநாதன் எம்.பி.
கரூர்	...	கே. ஏ. கிருஷ்ணசாமி எம்.ஏ. பி.எல்., சௌந்தரபாண்டியன் எம்.எல்.ஏ., எம். கந்தசாமி எம்.எல்.ஏ.
புதுக்கோட்டை	...	மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., பண்ருட்டி இராமச்சந்திரன் எம்.எல்.ஏ.
ஆத்தூர்	....	மாணவர் ஜீவர் கலைமணி கே. என். சிவப்பெருமாள் எம்.எல்.ஏ.
இடைப்பாடி	...	எஸ். கந்தப்பன் எம்.பி.
இராசிபுரம்	...	நாவளவன் ப. தா. முத்து எம்.எல்.சி.
திருச்செங்கோடு	...	கே. இராசாராம் எம்.பி. டி. ஏ. இராசவேலு எம்.எல்.ஏ.
தாராபுரம்	....	இளமுருகு பொற்செல்வி சி. டி. தண்டபாணி எம்.பி. பழனியம்மாள் எம்.எல்.ஏ.

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

வறட்சிப் பகுதிகளை வருவாய்த்துறை உறுப்பினர் நேரில் கண்டறிவார்

செங்கற்பட்டு மாவட்டத்தில் சுற்றுப் பயணம்

சென்னை, நவ, 25—

செங்கற்பட்டு மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், வருவாய்த் துறை உறுப்பினர் என். எஸ். மணி, நாளைமுதல் நான்கு நாட்கள் சுற்றுப் பயணம் செய்து--நிலையை நேரில் கண்டறிந்து, அதுபற்றிய அறிக்கையை அரசிடம் அளிப்பார்.

வறட்சியின் காரணமாக மாவட்டத்தின் பெரும்பகுதிகளில் பயிர்கள் காய்ந்துவிட்டதாகவும், இதனால் கிராமப் பகுதிகளிலும் நகரங்களிலும் அரிசியின் விலை உயர்ந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் மொழி பெயர்ப்பு ஏற்பாடு

மீண்டும் கோரிக்கை

புதுடில்லி, நவ. 25—

மக்களவையில், கழக உறுப்பினர் எஸ். டி. சோமசுந்தரம் தமிழில் உரையாற்றியபோது, 'அவையில் நடத்தப்படும் உரை ஒரே நேரத்தில், அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ள எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கை மறுபடியும் தெரிவிக்கப்பட்டது.

இரயில்வே (திருத்த) மசோதா மீதான விவாதத்தில், திரு. எஸ். டி. சோமசுந்தரம் கலந்துகொண்டு பேசுப்போது ச. சோ. கட்சித் தலைவர் எஸ். எம். ஜோஷி அவ்வாறு குறுக்கிட்டு, அந்தக் கோரிக்கையைத் தெரிவித்தார்.

"இந்தப் பிரச்சினை பரிசீலனையில் இருக்கிறது" என அவைத் தலைவர் சஞ்சீவ ரெட்டி தெரிவித்தார்.

"அந்த நாள் விரைவில் வரும் எனக் கருதுகிறேன்" என்று ஜார்ஜ் பெர்னண்டஸ் (ச. சோ.) சொன்னார்.

மக்களவையில் இப்போது ஒரே நேரத்தில் ஆங்கிலத்திலும் இந்தியிலும்தான் மொழி பெயர்ப்பு வசதி இருக்கிறது; இதர மொழிகளில் ஆற்றப்படும் உரைகளின் மொழிபெயர்ப்புக்கள் மறுநாள் தான் உறுப்பினர்களுக்குத் தரப்படுகின்றன.

இத்தாலி தொழில் நிறுவனப் பிரதிநிதிகள்

முதலமைச்சர் அண்ணாவைச் சந்தித்து உரையாடினர்

சென்னை, நவ. 25—

மேட்டூரில் அமைந்துள்ள சென்னை அலுமினியம் தொழிற்சாலைக்குத் தொழில் நுட்ப ஒத்துழைப்பை அளித்துவரும் இத்தாலிய நிறுவனமான 'மாண்டிக்காட்டினி'யின் பிரதிநிதிகள், முதலமைச்சர் அண்ணா அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து, அலுமினியத் தொழிற்சாலை விரிவு பற்றி விவாதித்தனர்.

அத்தொழிற்சாலையின் இப்போதைய உற்பத்தியை இரண்டு மடங்காக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத்தொழிற்சாலை தனியார் துறையைச் சேர்ந்ததாயினும், தமிழக அரசு, இதில் பெரும் பங்குகளை எடுத்திருக்கிறது.

ஊருக்கு வசதி செய்யவே உள்ளாட்சி மன்றங்கள்

கட்சி வேறுபாடுகளுக்கு அவற்றில் இடமில்லை

திருவள்ளூர் நகராட்சிமன்றக் கட்டிட திறப்பு விழா -- அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வலியுறுத்தல்

திருவள்ளூர், நவ. 25—

"நகராட்சி மன்றச் சட்டப்படி, 'ஆளுங் கட்சி — எதிர்க் கட்சி' என்று இல்லாமல் 'நகராட்சி மன்ற உறுப்பினர்கள் -- தலைவர்' என்ற அளவில்தான் நகராட்சிகள் இயங்கவேண்டும்.

"ஆனாலும், கட்சி அடிப்படையில் உறுப்பினர்களாவதால், தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறும் வரையில் கட்சி எண்ணம் இருக்கலாம்; அதற்குப்பின், 'ஊருக்குத் தொண்டு செய்ய வந்திருக்கிறோம்' என்பதை மனத்தில் கொண்டு உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் சேர்ந்து பணியாற்ற முன்வர வேண்டும்.

"மக்களுக்குத் தேவையானது சாலை வசதி — விளக்கு வசதி — தண்ணீர் வசதி — மருத்துவ வசதி ஆகியவைதான்; அவர்கள், 'கழகச் சாலையா? கம்யூனிஸ்டு விளக்கா? சோஷலிஸ்டுத் தண்ணீரா?' என்பதையெல்லாம் பார்ப்பதில்லை.

"மக்களுக்குப் பணியாற்றும் நோக்கத்தில் செயல்படும்போது உறுப்பினர்கள் எதிரும் புதிருமாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை"

என்று, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திருவள்ளூர் நகராட்சி மன்றக் கட்டிடத்தைத் திறந்துவைத்து, உரையாற்றுகையில் கூறினார். அவர் மேலும் பேசியதாவது:—

"ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் எல்லாமே மக்கள் தேவைகளை நிறைவேற்ற அமைக்கப்பட்ட மன்றங்கள்தான்.

சட்டமன்றங்களும், நாடாளுமன்றங்களும் சட்டம் இயற்றவும், தீர்மானங்களை நிறைவேற்றவும்தான் அமைக்கப்பட்டுள்ளன; ஆனால் உள்ளாட்சிமன்றங்கள், நாடாளுமன்றமும் சட்டமன்றமும் நிறைவேற்றக்கூடிய சட்டங்களையும், தீர்மானங்களையும் நிலைநாட்டத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை சரியாக நிறைவேற்றப்படுகின்றனவா -- நிலைநாட்டப்படுகின்றனவா என்பதைக்கண்காணிக்க நீதித்துறை அமைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, சனநாயகத்தில் சட்டம் இயற்றல்--அதை நிறைவேற்றல்--நீதி பரிபாலனம் ஆகிய மூன்றும் மூன்று தூண்களாக அமைந்திருக்கின்றன; இந்த மூன்று தூண்களில் ஒன்று பழுதுபட்டாலும், சனநாயகம் சரியாக நடைபெறாது.

சட்டமன்றத்திற்குள்ளும், நாடாளுமன்றத்திற்குள்ளும் கட்சி வேறுபாடு -- கொள்கை வேறுபாடு இருக்கலாம்; கொள்கை அடிப்படையில் கட்சிக்காரர்கள் தங்களுக்குள் மோதிக்கொள்ளலாம் -- முட்டிக்கொள்ளலாம்; கொள்கைகளைச் சண்டையிட்டு விவாதித்துக்கொள்ளலாம்; ஆனால், நகராட்சிமன்றத்தில் கட்சி வேறுபாடு இருக்கக்கூடாது; கொள்கை வேறுபாட்டுக்கு அங்கு இடமே இல்லை.

நகர மக்கள் அன்றாடத் தேவைகளைப் பெற்றுக் கவலையற்ற வாழ்வு வாழ வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டியது நகராட்சி மன்றத்தின் கடமையாகும். இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்வதும், நிதிக்கு வேண்டிய வழிவகைகள் செய்வதும் நகராட்சிமன்றங்களின் தலையாய கடமையாகும்."

அமைச்சர் முத்துசாமி

நகராட்சிமன்றத்தில், திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைத்து, உள்ளாட்சி அமைச்சர் திரு. மா. முத்துசாமி பேசியதாவது:—

"நகரங்கள் எந்த அளவுக்கு விரைந்து வளர்ந்துவருகின்றனவோ அந்த அளவுக்கு அங்குள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பும் ஏற்பட்டுள்ளது.

நகராட்சி உறுப்பினர்கள், தங்களால் முடிந்தவரை பணியாற்றியபோதிலும், பொதுமக்களின் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது.

மக்கள், செலுத்தவேண்டிய வரிகளைப் பாக்கியில்லாமலும் சுணக்கமில்லாமலும் செலுத்தினால்தான் நகராட்சிப் பணிகள் செவ்வனே நடைபெற முடியும்."

தானியங்களைக் காக்கும் அமிலம்

பிரிட்டனில் கண்டுபிடிப்பு

"அறுவடை முடிந்து சேகரிக்கப்படும் தானியம் உலராத நிலையிலேயே கிடங்குகளில் சேமித்து வைக்கப்படுகிறது. இப்படிச் சேகரிக்கப்படும் தானியம் காளான், கிருமிகள் இவற்றால் பாதிக்கப்பட்டுச் சேதம் அதிகமாகிறது.

காளான், கிருமிகளிலிருந்து தானியத்தைப் பாதுகாக்கவும், சேதத்தைத் தடுக்கவும் ஒருவகை அமிலம் இப்போது பிரிட்டனில் தயாரிக்கப்படுகிறது.

நான்கு ஆண்டு தீவிர ஆராய்ச்சியின் முடிவாக பிரிட்டிஷ் பெட்ரோலியம் என்ற நிறுவனம் இந்த அமிலத்தைத் தயாரித்திருக்கிறது, பிரிட்டனில் பயிராகும் பார்லி, இந்த அமிலத்தின் உதவியுடன் இப்போது பத்திரமாக பாதுகாத்து வைக்கப்படுகிறது.

"இதேபோல், அரிசி, சோளம், நிலக்கடலை முதலிய பயிர் வகைகளையும் பாதுகாக்கும் முறையை அறிமுகப்படுத்திவிட்டால், இந்த அமிலத்திற்கு உலகெங்கும் தேவை பெருகிவிடும்; இலட்சக்கணக்கான டன்களுக்கு அமிலம் நல்ல வகையில் பயன்படும் என்று இந்நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்; இப்போதுகூட 70 ஆயிரம் டன் அமிலம் உலகத் தேவை.

இந்த அமிலத்தைத் தானியத்தின்மீது தெளித்தால் அதில் சேர்ந்துள்ள கிருமிகளையும், காளான்களையும் கொன்று விடுவதுடன், மேற்கொண்டு இவை சேராமல் தடுக்கிறது.

ஒருமுறை அமிலம் தெளித்தால் 12 மாதங்களுக்கும் அதிகமாகவே அதன் சக்தியும், வீரியமும் நீடிக்கும்.

இதனைச் சிறப்பாகப் பத்திரப்படுத்தி வைக்கவும் தேவையில்லை. குளிர் பதனப் பெட்டியிலோ, முத்திரையிட்ட டின்களிலோ வைக்க வேண்டும் என்பதும் கிடையாது, மழையிலிருந்து பாதுகாப்பாக வைத்தால் மட்டும் போதும்! இது மழையில் நனைந்தால் இதன் வீரியம் கரைந்துவிடும்!

தானிய எடையில் நூற்றில் ஒரு பங்கு எடைக்கு அமிலம் தெளிக்க வேண்டும். அல்லது ஒரு டன் தானியத்திற்கு 2 காலன் அமிலம் தெளிக்க வேண்டும் என்று கணக்கிட்டுள்ளனர்.

ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் -- (7)

[எஸ். ஆர்.]

பரவசமூட்டும் பரம்பிக்குளம்!

வறுமையின் கொடுமை -- செல்வத்தின் செழிப்பு ஆகிய இரு துருவங்களையும் சந்தித்திருக்கும் மனிதர்களைப்போல், வறட்சி -- வளம் இரண்டும் உள்ள பகுதிகளைப் பெற்றிருக்கிறது கோவை மாவட்டம்!

கோவையின் ஆற்று நீர்ப் பாசனப் பகுதிகள் வளமைக்குப் பெயர் பெற்ற தஞ்சைத் தரணியையும் மிஞ்சி நிற்கின்றன!

கீழ்பவானி, அமராவதி, மேட்டூர் ஆகிய திட்டங்களின்கீழ் பாசன வசதி பெறும் பகுதிகளைப் போலவே, பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டப் பகுதிகளில், பசுமையும் செழுமையும் காணப்படுகின்றன.

அழகும் அமைதியும் ஒன்றை ஒன்று மிஞ்சும் ஆனைமலைப் பகுதிகளில் அமைந்து கிடக்கும் பரம்பிக்குளம் -- ஆளியாறு திட்டப் பகுதிகள், கோவை மாவட்டத்தில் நாங்கள் மேற்கொண்ட பயணத்தின் மணிமகுடமாகும். நினைவில் என்றும் நிற்கும் அக்குன்றுகளும், அதன் எழில் தோற்றங்களும், மனிதராய்ப் பிறந்தவர் அனைவரும் பார்க்க வேண்டும் என்று சொல்லவேண்டும்போல் இருக்கிறது.

ஆனைமலை ஊர்ப் பகுதியிலிருந்து 'மலையும் மலையைச் சார்ந்த இடமும்' என்ற இலக்கணம் ஆரம்பமாகிவிடுகிறது.

இயற்கைக்கு இப்படி ஒரு அமைதியா—இந்த அமைதிக்கு இப்படியும் ஒரு அழகா -- என்று வியப்பு மேலிடுகிறது; விவரிக்க வார்த்தைகள் தடுமாறுகின்றன.

ஏற்காடு -- நீலகிரி போன்ற மற்ற மலைவாழ் இடங்களுக்கும் -- ஆனைமலைக் குன்றுகளுக்கும் பெருத்த மாறுபாடு உண்டு. நீலகிரியும ஏற்காடும் மனிதர்கள் வாழும் மலைப் பகுதிகள்! ஆனைமலைக் குன்றுகளில் எப்போதோ ஒருமுறை மனிதர் நடமாடுகின்றனர்!

கடல்மட்டத்துக்கு மேல் சுமார் 2,000 அடி உயரம் எங்குமு மரங்கள் -- பசுமைச் செடிகொடிகள்! சூரியனை மறைக்கும் அடர்த்தி! போக்குவரத்து இல்லாத மலைப்பாதை! 'இங்கு நாம மட்டுமே இருக்கிறோம்' என்று ஒருகணம் நினைத்துக்கொண்டு, சுற்றியுள்ளஇயற்கையை அனுபவிக்கும்போது ஏற்படும இன்பம்...!

'பரந்த மனப்பான்மை' வேண்டும் என்று அடிக்கடிச் சொல்லுகிறோம் -- சொலலக்கேட்கிறோம். ஆனைமலைக் குன்றுகளில் இருந்துகொணடு அதன் அழகினை இரசித்தபோது, 'உயர்ந்த மனப்பான்மை' வேண்டும் என்றல்லவா சொல்லவேண்டும் என்று நினைக்கத் தோன்றியது!

வழியெல்லாம் யானைகளின் கதைகளை விவரித்த வண்ணம் வந்த பொறி இயல் அதிகாரி திரு. டி. எஸ். கண்ணன் கூறியவற்றிலிருந்து பார்த்தால் ஆனைமலைக் குன்றுகளின் முதல் குடிமக்கள், அங்குள்ள யானைகள்தான் என்பது தெரியவந்தது.

செய்தித் தாள்களிலெல்லாம் தலைப்புகளில் வந்து -- மூன்று நாட்கள் கடின உழைப்பைக் காட்டிய பல்வேறு துறை ஊழியர்களின் இதயக் கசிவைப் பெற்று -- 'சர்க்கார்பதி'க் கால்வாயில் உயிர் துறந்த யானை எரிந்துகொண்டிருந்ததையும் நேரில் காணும் ஒரு வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது.

ஆளியாறு நீர்த் தேக்கத்திலிருந்தே ஆரம்பித்த சிந்தையைக் கவரும் காட்சிகள், உயரே பரம்பிக்குளம் நீர்த் தேக்கத்தில் சென்று உச்சகட்டத்தை அடைகிறது!

காதலனின் பிடியில் சிக்கி மயங்கிக்கிடக்கும் பெண்ணைப்போல் ஒன்பது சதுர மைல் பரப்புள்ள பரம்பிக்குளம் நீர்த் தேக்கம, சுற்றிலும் மலைகளால் அணைக்கப்பட்டுத் தேங்கிக் கிடக்கும் காட்சியினை, இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம்போல் தோன்றுகிறது!

ஆசைப்பட்டுத் தேடிப் பெற்ற பொருளை, கைத்தலத்தில் இறுகப் பிடித்திருக்கும் பாங்கினைப் போல் ஆனைமலைக் குன்றுகள் தேடிப் பிடித்துச் சிறை வைத்திருக்கும் நீர்ச் செல்வம், பரம்பிக்குளம் தேக்கம்!

உயர்ந்த மனிதனின் ஆழமான நெஞ்சம்போல், ஆனைமலைக் குன்றுகள் மண்ணுலகின் பார்வை படாமல் மறைத்து வைத்திருக்கும் இயற்கையின் எழிலிடம் அந்த நீர்ப்பரப்பு!

'மலை முகடுகள் வழங்கும் ஆனந்தக் கண்ணீரோ' என்று அதிசயிக்கத்தக்க அருவிகள் ஆங்காங்கே இழைந்து கீழே ஓடிவந்து, தேக்கத்தின் அளவினை உயர்த்த அவ்வப்போது உதவி வருவதும் ஓர் அழகான காட்சியாகவே இருக்கிறது!

பரம்பிக்குளம் நீர்த் தேக்கத் திட்டங்களைப் பார்ப்பதா அல்லது அதனை உள்ளடக்கிய ஆனைமலைக் காடுகளைப பார்ப்பதா என ஒன்றையொன்று மிஞ்சுகின்றன!

ஆனைமலைக் குன்றுகளில் உற்பத்தியாகி அரபிக் கடலில் கலப்பதால், கேரளத்தையும் உள்ளடக்கிய ஒரு சில ஆறுகளைப் பயன்படுத்தி இரு மாநிலங்கட்கும் பாசன வசதியும், நீர் மின்சாரமும் பெறுவதே பரமபிகுளம் -- ஆளியாறு திட்டத்தின் அடிப்படை.

பொதுப்பணி, மின்வாரியம், நெடுஞ்சாலை, வருவாய், காவல், கூட்டுறவு, வேளாணமை, வனத்துறை ஆகிய பல்வேறு இலாகாக்களைத் தொடர்புபடுத்தும் ஒரு பல நோக்குத் திட்டம் இது! ஆசியாவிலேயே இதுபோனற ஒரு திட்டம் இல்லையென்றும் கூறபபடுகிறது. அனைத்துமே நமது நாட்டுப் பொறி இயல வல்லுநர்களால் அமைக்கப்பட்டுவருவது.

மலைகளுக்கிடையே உள்ள ஆற்று நீர்த் தேக்கத்தினை வசதிக்கேற்றவாறு தொடர்புபடுத்துவதும், அவ்வாறு தொடர்புபடுத்தும்போது நீர்ப் போக்கை, பாறைகளைக் குடைந்து நூற்றுக் கணக்கான அடிகள் வரையில் குகைகள் மூலமாகச் செலுததுவதும, அப்படிச செலுததும்போது ஒரு சில இடங்களில் நீர் மின்சாரத்தை உருவாககுவதும் இந்தப் பலநோக்குத் திட்டத்தின் முககியக கூறுகள்!

நீராறு அணை, சோலையாறு அணை, மண் அணை, சோலையாறு மின்சுரங்கம், பரம்பிக்குளம் அணை, பரப்பிக்குளம் சுரங்கம், கானக்கடவு அணை, பெருவாரிப்பள்ளம் அணை, தேக்கடி அணை, சர்க்கார்பதி அணை, சமநிலை கோடடுக் கால்வாய், நவமலைச் சுரங்கம், ஆழியாறு அணை, திருமூர்ததி அணை ஆகியன, இத்திட்டம மொததமாக உள்ளடக்கிய அல்லது சார்புடைய பகுதிகள்.

இவற்றில் பெருவாரிப் பள்ளம் அணை, தேக்கடி அணை போன்றவை, கேரள அரசின் ஒப்புதலுக்காக மட்டும் காத்து நிற்பவை. (கடந்த 7-ந் தேதிகூட கேரளச் சட்டமன்றத்தில் முதல்வர் நமபூதிரிபாடு இதுபற்றிய சாதகமான பதிலைத் தந்திருக்கிறார்.)

அடுத்த ஆண்டு இறுதிக்குள் பரம்பிக்குளம் திடடத்தின் மூலம் 2,40,000 ஏக்கர் விளை நிலம் பாசன வசதியினைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் முற்றுப்பெற வேண்டிய வேலைகள் இருநதபோதிலும், இத்திட்டத்தின் மொத்த மதிபபீடு சுமார் ரூ. 56 கோடி என்று கூறப்படுகிறது.

இயற்கை அழகு கெடாமல் -- சரியாகக் கூறுவதென்றால் அதற்கு இன்னும் பல மடங்கு மெருகு தரும் வகையில -- அமைந்துவரும திட்டம இது!

ஒன்பது சதுர மைல் பரப்பளவுக்கு ஒரு நீர்த் தேக்கத்தைப் பிடித்துவைத்திருப்பதாகக் கூருமல் கூறும் ஆனைமலைக் குனறுகளிடம், மனித முயற்சி வெறறி பெற்றிருககும் வியத்தகு சாதனைதான், ஆயிரக்கணககான அடிகள் வரை குன்றுகளைக குடைந்து நிர்மாணிததிருக்கும் கால்வாய்கள்!

ஆனைமலைக் காடுகள் -- அங்கே உள்ள பரம்பிக்குளம் திட்டப் பகுதிகள், ஒரு தனி உலகமாகவே கட்சி தருகின்றன!

உயர்ந்த அந்த இடத்துக்கு சென்றாலே மனிதனுக்கு வேண்டிய பரந்த மனப்பானமை தானாகவே வந்துவிடும!

திருப்பத்தூர் தமிழ்ச் சங்க வேண்டுகோள்

6—11—68 குன்றக்குடியில் நடைபெற்ற திருப்புத்தூர் தமிழ்ச் சங்கச் செயற்குழுக் கூட்டத்தின் தீர்மானம் வருமாறு:—

"இந்திய அரசின் மொழிச் சிக்கல் மிகவும் நுட்பமானது; ஆதலால், எந்த மாநிலத்து மக்களுக்கும் இழப்பு ஏற்படாதவண்ணம் மொழிச் சிக்கல் தீர்க்கப்பட வேண்டியது அவசியம்; அதுவே இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அரண் செய்யும் இந்திய அலுவலக மொழிச் சிக்கலைப் பரந்த மனப்பான்மையுடன் சிறுபான்மையினருக்கு உரிய பாதுகாப்புத் தரும்வகையில்--நேரிய வழியில் அணுகித் தீர்த்துவைக்கும்படி இந்தியப் பேரரசை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது."

நான்காவது திட்டத்தில் ரூ. 170 கோடி

தமிழக மின்சாரத் திட்டத்துக்கு செலவிடப்படும்

திட்டக் குழு ஒப்புதல் -- மின்சார வாரியத் தலைவர் விளக்கம்

சென்னை நவ. 25—

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்கான ரூ. 170 கோடி செலவுள்ள தமிழக மின்சார வாரியத்தின் திட்டங்களுக்குத் திட்டக் குழு ஒப்புதல் அளித்து விட்டது.

மின்சார வாரியத் தலைவர் வி. பாலசுந்தரம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாகத் தமிழக அரசின் நகல் திட்டம் குறித்து டில்லியில் விரிவாக விவாதம் நடத்தினர்.

"திட்டக் குழுவின் விசை பற்றிய செயல் குழு நகல் திட்டத்தை ஏற்றுக்கொண்டது" என்று அவர் தெரிவித்தார்.

"நான்காவது திட்ட காலத்தில் மாநிலத்தில் நெய்வேலி உட்பட மொத்த மின்சார உற்பத்தித் திறன் இரு மடங்காக அதிகரிக்கும்" என்றார் அவர்.

"ரூ. 170 கோடி செலவிலான இத்திட்டங்களைத் தவிர, நில அடமான பாங்கிகள், ஷெட்யூல்டு பாங்கிகள் போன்ற நிறுவனங்கள் மூலமாகவும், மத்திய அரசிடமிருந்து கடனுதவியாகவும் மொத்தம் ரூ. 20 கோடி வரை கிடைக்கும்; இந்த நிதி பம்பு செட்டுகளுக்கு மின் வசதி அளிப்பது போன்ற திட்டங்களுக்குப் பயன்படும்" என்று அவர் கூறினார்.

"பாண்டயாறு -- புன்னபுழா திட்டம் போன்ற பணிகள் முடிவடையாமல் உள்ள திட்டங்கள், தவிர, எண்ணூர் அனல் மின்சார விரிவுத் திட்டம், நடுவட்டம் திட்டம், கடம்பாறை நீர் மின்சாரத் திட்டம், கொல்லதி புழா நீர் மின்சாரத் திட்டம், குந்தா நீர் மின்சாரத் திட்டம் ஆகிய புதுத் திட்டங்களும் நான்காவது திட்டத்தில் இடம்பெறும்" என்றார்.

"இந்தத் திட்டங்கள் எல்லாம் நான்காவது திட்ட காலத்திலேயே முடிந்துவிடலாம்; இதைத் தவிர ஐந்தாவது திட்ட காலத்தில் முடியக்கூடிய வகையில் பல புதுத் திட்டங்களுக்கும் முன்முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்" என்றார்.

அவர் மேலும் கூறியதாவது :—

"திட்டத்தில் பெரும் பகுதி கிராமப்புற மின்சார வசதிகளுக்காக இருக்கும்; நான்காவது திட்டத்தில் 2·5 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சார வசதி கிடைக்கச் செய்யலாம் என்று மின்சார வாரியம் எதிர்பார்க்கிறது. இதற்கு ரூ. 62 5 கோடி செலவாகும். இந்தத் திட்டம் வெற்றி பெற்ருல் நான்காவது திட்ட கால இறுதியில் 6·5 இலட்சம் பம்பு செட்டுகள் மின்சார வசதி உடையனவாக இருக்கும்.

மொத்த மின்சார உற்பத்தித் திறனை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நடப்பு ஆண்டு இறுதியில் மின்சாரப் பயன்பாடு அளவு 460 கோடி யூனிட்டுகளாக இருக்கும் என்றும், தலா பயன்பாடு 120 யூனிட்டுகளாக இருக்கும் என்றும் மதிப்பிட்டுள்ளது.

முடிவடையாமல் உள்ள திட்டங்களுக்கு முன்னுரிமை தரப்படும். முடிவடையாமல் உள்ள திட்டங்கள் முடிவடைந்தவுடன் நெய்வேலி நீங்கலாகப் பாசனம் அல்லாத காலத்தில் 1968--69-ல் 584 மெகாவாட்டாக இருக்கும் சென்னை கிரிட் மின்விசை உற்பத்தி 1970--71-ல் 1067 மெகாவாட்டாக அதிகரிக்கும்.

1969--70-ல் நெய்வேலி அனல் மின்சார நிலையம் 600 மெகாவாட் உற்பத்தி செய்யுமானுல் 1970--71 முதல் கிரிட் முழுவதும் 1393 மெகாவாட் உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கும்."

சென்னையில்

புதிய கலங்கரை விளக்கம்

சென்னை, நவ. 26—

150 அடி உயரமுள்ள ஒரு புதிய கலங்கரை விளக்கம் (லைட் அவுஸ்) சென்னை மெரினா கடற்கரையில் கட்டப்பட்டதும், சுமார் 100 ஆண்டுகளாக உயர் நீதிமன்றத்தின் கட்டடம் ஒன்றின் உச்சியில் ஒளிரும் கலங்கரை விளக்கம் எடுக்கப்பட்டுவிடும்; இப்போதிருக்கும் இடத்திலிருந்து தெற்கே சுமார் 2 மைல் தொலைவில் புதிய கலங்கரை விளக்கம் அமையும்.

ரதிய கலங்கரை விளக்கம் அமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுவிட்டன. இதை அமைப்பதற்கு ஒப்புதல் கிடைத்துவிட்டது.

இதைக் கட்டுவதற்குச் சுமார் ரூ. 17 இலட்சம் செலவாகும். இத்தொகையில், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கும் மின்சாரத் தளவாடத்திற்கு மட்டும் சுமார் ரூ. 5 இலட்சம் ஆகும்.

புதிய கலங்கரை விளக்கத்தின் ஒளி கடற்பரப்பில் சுமார் 20 மைல் தூரத்திற்குத் தெரியும்.

தமிழகத்தின் கடற்கரைப் பகுதியில் மேலும் இரண்டு கலங்கரை விளக்கங்கள் அமைக்கப்படுகின்றன. நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் இவை கட்டப்படுகின்றன.

நாகப்பட்டினம் கலங்கரை விளக்கத்திற்கான மின்சாரத் தளவாடம் வந்து சேர்ந்துவிட்டன. இந்த இரு கலங்கரை விளக்கங்களும் 150 அடி உயரம் இருக்கும்.

சென்னையில் புதிய கலங்கரை விளக்கம் செயல்படத் துவங்கியதும் உயர் நீதிமன்றக் கட்டடத்தில் இப்போதுள்ள பழைய கலங்கரை விளக்கம் ஒளி வீசுவது நின்றுவிடும்.

உடலுக்கு ஏற்ற உணவு எது?

கூறுவதற்கு இயந்திரம்

நமது உடல் இருக்கும் நிலைக்கு என்னென்ன சத்துக்கள் எந்தெந்த அளவில் தேவை -- அவை எந்தப் பொருள்களில் இருக்கும் என்பது நமக்கே தெரியாது.

தேவையான சத்து கிடைக்கிறதோ இல்லையோ — கிடைக்கின்ற பொருளை உண்டு வாழ்கிரேம்; இனி இதுபற்றிய கவலையே வேண்டாம்.

"இந்த உடலுக்கு இன்னின்ன சத்துப் பொருள்கள் தேவை; அந்தச் சத்துப் பொருள்கள் இன்னின்ன பொருள்களில் கிடைக்கின்றன; எனவே, அவற்றை மட்டும் வாங்கி -- உண்டு, பலனடைந்துகொள்" என்று நமக்கு இயந்திரமே சொல்லும்.

உணவுப் பொருள்களில் புரதச் சத்து எவ்வளவு -- கொழுப்புச் சத்து எவ்வளவு -- வைட்டமின்கள் எவ்வளவு -- என்ற விவரங்களைத் தந்துவிடும் இந்த இயந்திரம். இது போன்ற சுமார் 800 வகை உணவுப் பொருள்களின் சத்துக்கள் குறித்த விவரங்களைச் சேகரித்து வைத்துள்ளது இந்த இயந்திரம்.

நமக்குத் தேவையான சத்துப் பொருள்கள் பெற முடிவதுடன் வீண் செலவும் இதனுல் குறைகிறது.

குறிப்பிட்ட பொருளில் இன்னின்ன சத்துப் பொருள்கள் இருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டவுடன், அந்தச் சத்துக்கள் தேவையென்ருல் மட்டுமே அதனை வாங்கிக்கொள்ளலாம்; இல்லையெனில் அதனை வாங்கத் தேவையில்லையே!

இலண்டனில் உள்ள ஹட்டர்ஸ் பீல்டு தொழிலியல் கல்லூரியின் கணிதப் பிரிவில் இதனைத் தெரிவிக்கும் கம்ப்யூட்டர் ஒன்று அமைக்கப்படுகிறது.

நாகர்கோயில் தொகுதி வாக்காளர் பட்டியல்

திருத்தம் செய்யக் கடைசித் தவணை

சென்னை, நவ. 26—

நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ளடங்கிய— நாகர்கோயில், கொளச்சல், பத்மநாபபுரம், திருவட்டாறு, விளவங்கோடு, கிள்ளியூர் ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்குமான வாக்காளர் பட்டியல்கள், 1968 நவம்பர் 11-ல் இறுதியாக வெளியிடப்பட்டுள்ளன.

இறுதிப் பட்டியல்களை பத்மநாபபுரம் ரெவினியூ டிவிஷனல் அதிகாரியின் (வாக்காளர் பதிவு அதிகாரி) அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வையிடலாம். தொகுதி முழுவதற்குமான வாக்காளர் பட்டியல் நகல்கள் பொதுமக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கின்றன. வாக்காளர் பதிவு அதிகாரியின் அலுவலகத்திலிருந்தும் வாக்காளர் பட்டியல் சம்பந்தமான முழு விவரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

வாக்காளர் பட்டியல் சரியானதாக இருக்கத் தேர்தல் அதிகாரிகள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டுள்ளார்கள்; எனினும் சில தவருன தகவல்கள் இடம் பெற்றிருந்தால், அவற்றைத் திருத்தக்கோரி, நமூனு 8-ல் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்; அவர் விசாரித்து அவசியமான திருத்தங்களைச் செய்வார்.

தொகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒருவர், அதே தொகுதியில் வேருேர் இடத்திற்குப் பெயர் மாற்றக் கோரி வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். இதற்கென நிர்ணய நமூனு எதுவும் இல்லை. வாக்காளர் பதிவு அதிகாரி விசாரித்து, தக்க திருத்தங்களைச் செய்வார்.

பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒருவரின் பெயரை எதிர்த்து, நமூனு 7-ல் விண்ணப்பித்துக் கொள்ளலாம். மாற்றம் -- திருத்தம் -- நீக்கம் சம்பந்தமாகத் தகுதியுள்ளவரின் பெயர் விடுபட்டிருந்தால், அவரது பெயர் பிரிவு 23-ன் கீழ்ப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படலாம். இதற்கு நமூனு 6-ல் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

புதிய பெயர்களைச் சேர்ப்பதற்கான 'தகுதி நிர்ணய தேதி' 1968 சனவரி முதல் நாளாகும்.

பிரிவு 22, 23 ஆகியவற்றின் கீழ், வாக்காளர் பதிவு அதிகாரியின் உத்தரவை எதிர்த்து, 'மத்திய தேர்தல் அதிகாரி, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9'-க்கு மேல் முறையீடு செய்யலாம்.

நெசவாளர்களின் நல்வாழ்வுக்குத் தமிழக அரசு ஆவன செய்யும்

திட்டங்கள் பல வகுத்துச் செயல்படும்

அருப்புக்கோட்டையில் அமைச்சர் மாதவன் உறுதி

13—11—68 இரவு 7 மணிக்கு அருப்புக்கோட்டை நகர தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் புளியம்பட்டி தியாகராயர் வாலிபர் சங்க முன்புள்ள திடலில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டதி.மு.க. அவைத் தலைவர் சிவ. சண்முகசுந்தரம் தலைமை வகித்தார்.

அமைச்சர் செ. மாதவன் உட்பட உடன் வந்திருந்த அனைவரையும் வரவேற்று நகரச் செயலாளர் பி.பி.என். நல்லதம்பி மலர் மாலையும், கைத்தறி ஆடையும் அணிவித்தார்.

தலைவர் உரைக்குப் பின் வட்டப் பொருளாளர் திரு. ஆ. குருசாமி, வட்டச் செயலாளர் மு. சுந்தரராசன், முதுகுளத்தூர் வட்டச் செயலாளர் மாங்குடி மதியழகன், வே. தங்கப்பாண்டியன் எம்.எல்.சி, பி. திருஞானம் எம்.எல்.சி. ஆகியோர் பேசினர்.

மாவட்டச் செயலாளர் எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் பேசுகையில், வரும் நகராட்சித் தேர்தலில் தி. மு. க. வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டியதன் அவசியத்தை விளக்கினர்.

இறுதியில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பேச எழுந்ததும், பல்வேறு அமைப்புகள் சார்பிலும் உட்கிளைகள் சார்பிலும், சார்பு மன்றங்கள்--சிற்றூர் கிளைகள் சார்பிலும் மலர்மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

அமைச்சர் பேசுகையில், குறிப்பிட்டதாவது :—

"கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த அருப்புக்கோட்டை நகரில் கலந்து பேசுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்; நெசவாளர்களுக்காகத் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்பட்டு வருகிறது.

நாட்டின் நல்வாழ்வுக்கு நன்மைகள் பல செய்தாலும் காங்கிரசார், கழக அரசைக் குறை கூறுகிருர்கள்! 20 ஆண்டுகளாக அவர்கள் செய்ததை கூறட்டும் -- 18 மாதத்தில் நாம் செய்ததைச் சொல்வோம்; நாட்டுமக்கள் தீர்ப்பளிக்கட்டும்.

சென்னை மாநகராட்சித் தேர்தலில் காங்கிரசு வெற்றிபெற்றதாகக் கூறுகிருர்கள். மேயர் தேர்தலில் தி. மு. க. பெற்ற வெற்றி அவர்களுடைய பேச்சைப் பொய்யாக்கிவிட்டது.

நாகர்கோவிலிலும், வரும் நகராட்சித் தேர்தல்களிலும் காங்கிரசுக் கட்சி தோல்வியைத் தழுவுவது உறுதி. இப்பகுதி வாழ்மக்கள், நகராட்சித் தேர்தலில் தி. மு. கழகத்திற்குப் பெரும் வெற்றியைத் தேடித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்."

கூட்டத்தில் தோழர் சொக்கலிங்கம் அவர்களின் ஆண் குழந்தைக்கு 'தமிழரசன்' என்று அமைச்சர் பெயர் சூட்டினர்.

இந்நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் சங்கரபாண்டியன், சார்த்தூர் முன்னுள் வட்டச் செயலாளர் எஸ். பி. மணியம், முதுகுளத்தூர் நகரச் செயலாளர் கருமலையான் அபிராமம் மாவட்டப் பிரதிநிதி இ. மு. சாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருவள்ளூர் நகராட்சியின் புதிய கட்டிடம்

அமைச்சர் நெடுஞ்செழியன் திறந்துவைத்தார்

வள்ளுவர் படத்தை அமைச்சர் முத்துசாமி திறந்தார்

திருவள்ளூர், நவ. 25—

திருவள்ளூர் நகராட்சி மன்றத்திற்கான புதிய கட்டிடத்தை, கல்வி-தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் திறந்து வைத்தார்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி, திருவள்ளுவர் படத்தைத் திறந்துவைத்தார்.

தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எம். துரைராஜ் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

நகராட்சித் தலைவர் திரு. ஆளவந்தார் அனைவரையும் வரவேற்ருர்.

இவ்விழாவை முன்னிட்டு நகராட்சி மன்றம் ஆயிரம் பேர்கட்கு உணவளித்தது.

குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன், துணைத் தலைவர் வி. வி. கிரி, தலைமையமைச்சர் இந்திரா காந்தி, மற்றும் தமிழக முதலமைச்சர் அண்ணு, பொதுப்பணியமைச்சர் மு. கருணாநிதி, மற்றும் பலரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

அமைச்சர்கள் இருவருக்கும் நகராட்சி மன்றச் சார்பில் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

இந்தப் புதிய கட்டிடம் ரூ. 2,28,000 செலவில் கட்டப்பட்டது.

விழாவை முன்னிட்டு கட்டிடம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

சென்னை-பழைய வண்ணை அண்ணு மன்றம்

சென்னை — பழையவண்ணை, பாஷியம் நாயுடுதெருவில் தோழர் மு பாண்டியன் தலைமையில் அண்ணு மன்றம் திறக்கப்பட்டது; நா. அருணசலம் தலைவராகவும், இலி. வரதன் செயலாளராகவும் ஆ. தாமோதரன் துணைச் செயலாளராகவும் கு. எல்லப்பன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை நக்கீரர் கழக கட்டுரைப் போட்டிகள்

தமிழ்த் தென்றல் திரு.வி.க. நினைவாகவும், டாக்டர் தருமாம்பாள் நினைவாகவும் கட்டுரைகள் போட்டிப் பரிசுகளும், டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளை நினைவாகக் கவிதைப் போட்டிப் பரிசுகளும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

போட்டிகளின் முதற் பரிசு வெள்ளிக் கோப்பை (ரூ. 25 மதிப்பு); இரண்டாம் பரிசு வெள்ளிப் பதக்கம் (ரூ. 15 மதிப்பு); மூன்ரும் பரிசு ரூ. 10 மதிப்புள்ள தமிழ் நூல்கள்.

இப்போட்டிகளுக்கு எல்லாக் கல்லூரி இளங்கலை வகுப்பு மாணவிகள் மட்டும் கலந்துகொள்ளலாம்; கட்டணம் இல்லை; ஆனுல் அஞ்சல் செலவுகளுக்கு 25 காசு மதிப்புள்ள அஞ்சல் தலை மட்டும் அனுப்பிவைத்தல் நலம்.

ஒரு கல்லூரிக்கு 3 இளங்கலை வகுப்பு மாணவிகள் மட்டுமே ஒவ்வொரு போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம். கட்டுரைகளும் கவிதையும் தூய தமிழ் நடையில் இருத்தல் வேண்டும். மாணவிகள் தங்கள் கட்டுரைகளையும் கவிதைகளையும், தமிழ்த்துறைத் தலைவர் சான்றிதழோடு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கட்டுரை :—

திரு.வி.க. நினைவுப் பரிசு : 'அறிவியலும் தமிழும்';

டாக்டர் தருமாம்பாள் நினைவுப் பரிசு : 'தமிழ் தந்த தாயர்'—

(இப்பொருள்களைப் பற்றிய கட்டுரைகள் 150 வரிகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்).

கவிதை :—

டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை நினைவுப் பரிசு: 'மாலை மதியம்'

(இப்பொருளைப் பற்றிய கவிதை ஆறு வெண்பாக்களாகவோ அல்லது நாற்பது வரிகட்கு மேற்படாத ஆசிரியப் பாவாகவோ இருக்க வேண்டும்.)

மேற்படி கட்டுரைகளையும் கவிதைகளையும், 1968 டிசம்பர் 10-ம் நாளுக்குள் 'செயலாளர், நக்கீரர் கழகம், 27, பிள்ளையார் கோயில் தெரு, தொண்டையார்ப்பேட்டை, சென்னை-21' என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

கட்டுரைகளையும் கவிதைகளையும் மூன்று நடுவர்கள் பார்வைக்கு அனுப்பி, வெற்றிச் செய்தி 1969 சனவரி 5-ம் நாள் வெளியிடப்படும்.

பரிசு பெற்ற கட்டுரைகளும் கவிதைகளும் தமிழகத்தில் உள்ள சிறந்த கிழமை இதழ்களில் வெளியிடப்பெறும்.

"பரிசு பெற்றவர்களுடைய பரிசுகள் 1969 சனவரித் திங்களில் நடைபெறும் தமிழ்த் திருநாளில் வழங்கப்பெறும். தமிழ்த் திருநாள் அழைப்பு முறையே அனுப்பப்பெறும்" என்று நக்கீரர் கழகப் பொதுச் செயலாளர் சிறுவை நச்சினர்க்கினியன் அறிவிக்கிருர்.

கொடுங்கோன்மைக்கு வித்திடுவதா?

மக்களவையில் கடும் கண்டனம்

போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு கடுந் தண்டனை விதிப்பதா?

புதுடில்லி, நவ. 25—

மறியல், மற்றும் போராட்டங்கள் மூலம் இரயில் போக்குவரத்துக்குக் குந்தகம் விளைவிப்போருக்குக் கடுமையான சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்க வகை செய்யும் சட்டத் திருத்தத்தை, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பலரும் நாடாளுமன்றத்தில், கடுமையாகக் கண்டித்தனர்.

“இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அரசு கொடுங்கோன்மையாகச் செயல்படுகிறது” என்று பலரும் கூறினர்.

மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தத்தின்போது பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தில் உள்ளடங்கியிருந்த இத்தண்டனைகட்கு, நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறும் பொருட்டு, மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இரயில் ஊழியரோ, வேறு யாராக இருந்தாலும் மறியல், மற்றும் போராட்டங்களில் ஈடுபட்டு போக்குவரத்துக்கு இடையூறு செய்தால், உயர்ந்தபட்சம் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும் ரூ. 500 அபராதமும் விதிக்க இம்மசோதா வகை செய்கிறது.

கண்ட இடங்களில் அனுமதியின்றி இரயில்களை நிறுத்தும் (வேலை நிறுத்தத்தின் போது) இரயில்வே ஊழியர்கட்கும் இத்தண்டனை விதிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மசோதா நிறைவேற்ருமல் இருக்க எதிர்க் கட்சிகள் மேற்கொண்ட முயற்சிகள் எல்லாம் தோல்வி கண்டன.

'அட்டர்னி-ஜெனரலை அழைத்து இம்மசோதா குறித்து அவரது கருத்தை அறிய வேண்டும்” என்ற கோரிக்கையும் காங்கிரசாரால் நிராகரிக்கப்பட்டது.

இரயில்வே அமைச்சரால் கொண்டுவரப்பட்ட இம்மசோதாவுடன், ச. சோ. உறுப்பினர் ஜார்ஜ் பெர்ணுண்டஸ் கொண்டு வந்த 'மத்திய அரசின் அவசரச் சட்டத்தில் அவையின் அதிருப்தி' யைத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தீர்மானத்தைத் தாக்கல் செய்து பெர்ணுண்டஸ் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“அவசரச்சட்டம் இரயில்வே ஊழியரின் தொழிற் சங்க இயக்கத்தை அழித்தொழிக்கும் கொடுங்கோன்மையான கருவியாகும். பல சனநாயக நாடுகளிலும் அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர்; ஆனல் எந்த அரசும் இப்படிப்பட்ட சனநாயகவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.”

கழக உறுப்பினர் எஸ்.டி. சோமசுந்தரம், அரசின் செயலைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“இரயில்வேயில் திறமை வளருவதற்கு இப்படிப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகள் உதவாது ; விபத்துக்களைத் தடுப்பதில் திறமையான கண்காணிப்பும், ஊழியர்களின் நலனில் உண்மையான அக்கறையும், பயணம் செய்வோருக்குத் தகுந்த வசதிகளும் செய்து கொடுப்பதன் மூலமாகத்தான் இது கைகூடும்.”

பெர்ணுண்டசின் தீர்மானம் காங்கிரசாரின் பெரும்பான்மை பலத்தால் தோற்கடிக்கப்பட்டது.

தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கோபிசெட்டிபாளையம்	...	மாணவர் ஜின்னு கோபி சாமிநாதன் எம்.பி.
உடுமலைப்பேட்டை	...	மாணவர் சனர்த்தனம் எம்.ஏ. உடுமலை நாராயணன் எம்.பி.
ஈரோடு	...	பொற்செல்வி இளமுருகு ஈரோடுசின்னசாமி எம்.எல்.ஏ.
பொள்ளாச்சி	...	சி. தமிழரசி பி.ஏ. சண்முகசுந்தரம் எம்.எல்.ஏ.
திருப்பூர்	...	வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ. சு. துரைசாமி எம்.எல்.ஏ.
பழனி	...	கோவை மு. இராமநாதன்
திண்டுக்கல்	...	ப்வளவண்ணன் எம்.சி. அன்புச்செழியன் எம்.பி. ஓ. பி. இராமன் எம்.எல்.ஏ.
பெரியகுளம்	...	க. அறிவழகன் எம்.எல்.சி., கே. எம். எம். மேத்தா எம்.எல்.ஏ.
தேவகோட்டை	...	தஞ்சை கிரேசி சேவியர் பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ.
பரமக்குடி	...	கம்பம் இராசாங்கம் எம்.எல்.ஏ.
இராமநாதபுரம்	...	தங்கபாண்டியன் எம்.எல்.சி. தங்கப்பன் எம்.எல்.ஏ.
சிவகங்கை	...	உ. பில்லப்பன் எம்.ஏ.பி.எல். காவேரி மணியம் பி.ஏ.பி.எல். கு. திருப்பதி பி.ஏ.பி.எல்.
காரைக்குடி	...	எம். குமார் சி. சேதுராமன் எம்.எல்.ஏ.
விருதுநகர்	...	ஆலடி அருணு எம்.எல்.ஏ. எஸ். எஸ். தென்னரசு
தூத்துக்குடி	....	எம். சி. பாலன் எம்.எல்.ஏ. அழகியநம்பி பி.ஏ.பி.எல்,
கோவில்பட்டி	...	காட்டூர் கோபால் இரத்தினசபாபதி எம்.எல்.ஏ.
சங்கரன்கோவில்	...	கே. எம். கதிரவன் எம்.எல்.ஏ. டி. வெள்ளைதுரை எம்.எல்.ஏ.
தென்காசி	...	எம். எஸ். சிவசாமி எம்.எல்.ஏ. களந்தை ஜின்னு இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ.
பட்டுக்கோட்டை	...	எஸ். டி. சோமசுந்தரம் எம்.பி. எம். கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.
மன்னர்குடி	...	எல். கணேசன் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ. அறந்தாங்கி மனேன்மணி
குடந்தை	...	இரா. செழியன் எம்.பி. குட்வாசல் கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.
மாயூரம்	...	என்.வி.என். சோமு பி.ஏ.பி.எல். என். கிட்டப்பா எம்.எல்.ஏ. எஸ். கணேசன் எம்.எல்.ஏ.

கல்வி :: தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

நவ. 28 காலை 9-மணி : அறந்தாங்கி—பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் கலந்துகொள்ளல் ; பகல் 12 மணி : அறந்தாங்கி—ஊராட்சி ஒன்றிய பேரூராட்சி மன்ற வரவேற்பு ; பிற்பகல் 2-30 மணி : தொழுவங்காடு—பள்ளிக் கட்டிடத் திறப்பு ; 3-30 மணி : விலட்டூர்—கண்ணகி படிப்பகக் கட்டிடத் திறப்பு ; மாலை 4 மணி : அறந்தாங்கி—உயர்நிலைப் பள்ளியில் முதலமைசர் படத் திறப்பு ; 4 மணி : அறந்தாங்கி—பட்டா வழங்கலும் வயோதிகர்களுக்கு உதவித் தொகை உத்தரவுகள் வழங்கலும் ; 5-30 மணி : அரசர் குளம்—பள்ளிக் கட்டிடத் திறப்பு ; 6-30 மணி : பிடாரிக் காடு—பொதுக்கூட்டம்.

முருகு பாண்டியன் குழுவினர்

கலை நிகழ்ச்சிகள்

நவ. 27 : ஒலகடம் (பவானி) ; 28 : சித்தூர் ; 29, 30 : சங்ககிரி.

டிச. 1 முதல் 14-வரை : பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதிகள் ; 19 முதல் 22-வரை : உதகை ; 28 : தொட்டாம்பாளையம்.

இந்தியத் தலைநகரில் இந்தி வெறியர் போராட்டமாம்

‘ஆங்கிலப் பெயர்பலகை ஒழிப்பு இயக்கம்’ நடத்தப் போகிறுர்களாம்

அமிர்தசரஸ், நவ. 26—

பல நாட்டவரும், பல மாநிலத்தவரும் ஏராளமாக வசித்து வரும் இந்தியத் தலைநகரான புதுடில்லியில் ஆங்கிலப் பெயர்ப் பலகை ஒழிப்புப் போராட்டம் ஒன்றைத் துவங்கப் போவதாக இந்தி வெறியரான சேத் கோவிந்த தாஸ் அறிவித்திருக்கிறுர்.

இவர் இந்தி சேவக் சங்கத்தின் தலைவருமாவார்.

புதுடில்லியின் நவநாகரீக வணிகப் பகுதியான கென்னுட் பிளேசில், ஆங்கிலப் பெயர்ப் பலகைகளை அகற்றி இந்திப் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட வேண்டுமென்பதற்காகப் 'போராட்டம்' ஒன்றை விரைவில் இச்சங்கம் ஆரம்பிக்குமாம் ; இதற்கான நாள் பிறகு அறிவிக்கப்படுமாம்.

‘இந்திப் பகுதியிலிருந்து வந்த எல்லா உறுப்பினர்களும் இந்தி மொழியிலேயே நாடாளுமன்றத்தில் பேச வேண்டும்” என சேத் கோவிந்த தாஸ் கேட்டுக் கொண்டிருக்கிறுர்.

இந்தி மாநிலங்கள் இன்னமும் மத்திய அரசுடன் ஆங்கிலத்திலேயே கடிதப் போக்குவரத்து வைத்துக்கொண்டிருப்பதற்கு அவர் வருத்தம் தெரிவித்திருக்கிறுர்.

பஞ்சாபில், இந்திக்கு இரண்டாவது ஆட்சி மொழி அந்தஸ்து வழங்க வேண்டுமென்றும் அவர் கோரியிருக்கிறுர்.

பஞ்சாப் மாநிலத்தில் 30 சதவிகிதத்தினருக்கு மேற்பட்டோர் இந்தி பேசுவதால் அரசியல் சட்டப்படி இந்தியை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்பது அவரது வாதமாகும்.

இந்திய தலைநகரில் நச்சுக் காய்ச்சல்

2-இலட்சம்பேர் பாதிப்பு

டாக்டர்களுக்கு ஓய்வில்லையாம்

புதுடில்லி, நவ. 26—

‘ஆசியன் புளூ’ என்றும், ‘மாவோ புளூ’ என்றும் கூறப்படும் நச்சுக் காய்ச்சல், டெல்லி மாநகரைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது.

“30-இலட்சம் மக்கட் தொகையைக் கொண்ட இந்நகரில் சுமார் 2-இலட்சத்திற்கு மேற்பட்டோரை இந்நோய் பீடித்திருக்கிறது” என்று அதிகார பூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன.

நகரில் உள்ள எல்லா மருத்துவர்களும் ஓய்ச்சல் ஒழிவின்றி பணியாற்றிவருகின்றனர்.

ஒவ்வொரு அலுவலகங்களிலும் குறைந்தது 10-சதவிகித ஊழியர்களாவது இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதனல் ஏராளமானேர் வேலைக்கு வரமுடியாமல் போய் விடுகிறது என்றும் கூறப்படுகிறது.

அண்ணு-நிஜலிங்கப்பா சந்திப்பு

சென்னை, நவ. 25—

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் எஸ். நிஜலிங்கப்பா, இன்று காலை முதலமைச்சர் அண்ணு அவர்களை, நுங்கம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் சந்தித்துப் பேசினர்.

“அண்ணுதுரை எனது நண்பர் ; அவரது உடல்நிலை பற்றி அறிந்து கொள்ள வந்து பார்த்தேன்” என்று நிஜலிங்கப்பா கூறினர்.

நடக்க இருப்பவை

28--11--68

தப்பளாம்புலியூர்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு கடைத் தெருவில் ; தலைவர் : எஸ். திருஞானம் ; பேசுவோர் : சு. தென்கோவன், எஸ். தியாகராசன் பி.ஏ.பி.எல்., அ.பெ. பால்ராஜ், பொ. கணபதி, வே. இராசன், ச. இராதா, சு. தட்சணமூர்த்தி, ந. இராமசாமி மற்றும் பலர். (மணி—சாமி குழுவினர் கலை நிகழ்ச்சி நடை பெறும்.)

பொதுப்பணி அமைச்சர்

மு. கருணநிதி

சுற்றுப்பயணம்

நவ. 28 மாலை 3-மணி : பேரூரணி 3-45 மணி : ஏரல் ; மாலை 4-30 மணி : ஆத்தூர் ; 5-15 மணி : குலசேகரப்பட்டணம் ; 6-மணி : வேளாளன்விளை ; 6-30 மணி : திருச்செந்தூர் ; இரவு 7-30 மணி : பாளையங்கோட்டை—பொதுக்கூட்டம்.

நவ 29 காலை 7-மணி : சாத்தான் குளம் ; 10-மணி : களக்காடு—மேல்நிலை தண்ணீர்த் தொட்டி திறப்பு ; 11-30 மணி : திருநெல்வேலி—திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி மாணவரிடை சொற்பொழிவு.

புதுவை எம்.ஏ. சண்முகம் அறிவிப்பு

மருத்துவர்கள் ஆலோசனையின் மீது, புதுவை மாவட்ட தி.மு.க. செயலாளர் எம். ஏ. சண்முகம் அவர்கள், மறு அறிவிப்பு வரையில், பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலாமலிருப்பதை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்கிறுர்.

அரசியல் -- கலை -- இலக்கியக் கட்டுரைகளுடன்

‘கூடலரசன்’

[தி.மு.க. வார இதழ்]

5—1—69-ல் வெளிவருகிறது

தனி இதழ் 20 காசுகள்
ஆண்டுச் சந்தா ரூ. 10

முன்பணம் செலுத்தக்கூடிய விற்பனையாளர்கள் தேவை

விவரங்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக :

210, நாயக்கர் புதுத் தெரு, மதுரை-1.

ஆசிரியர் : கூடலரசன்

ஆப்பூர் நகரில் குடும்பக் கார்டு முறை டிச. 1-ம் நாள் முதல் செயல்படுத்தப்படும்.

வடாற்காடு கலெக்டர் பெல்லியப்பா, இத்திட்டத்தைத் துவக்கி வைப்பார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.